**தலைப்பு 307 - மோட்டார் போக்குவரத்து திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் அரசாங்க மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2022 யூன் 07 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் விரிவான வருடாந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூன் 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சலை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்கவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமையவும் தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

**1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னைய ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தனிநபர் மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் மொத்த தொகைக்கும் அத் திகதியில் உள்ளவாறான திணைக்களப் புத்தகத்தின் பிரகாரமான மீதிக்கும் இடையே ரூபா 2,071,479. வேறுபாடு காணப்பட்டது. | 2002 ஆம் ஆண்டில் ரூபா 15,000 இல் ஆரம்பித்த மீதியானது 2005 ஆம் ஆண்டளவில் ரூபா 1,500,000 வரை அதிகரித்திருந்தமை அவதானிக்கப்படுகிறது. இதனை மேலும் பரீட்சித்து தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கொடு:க்கல் வாங்கல்கள் தொடர்புடைய பதிவேடுகள் மற்றும் மூல ஆவணங்களுடன் ஒப்பிட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**1.6.2 இனங்காணப்படாத பெறுவனவுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான வருமானமாக சரியாகக் இனங்காணப்பட்டு கணக்குகளில் தேவையான சீராக்கங்கள் செய்யப்பட்டிருக்க வேண்டிய ரூபா 18,598,049 தொகை இனங்காணப்படாத பெறுவனவுகளாக வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்தது. | ரூபா 18,476,885 தொகையான இனங்காணப்படாத பெறுவனவுகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் ரூபா 121,164 மிகுதித் தொகையை காலக்கிரமத்தில் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கொடுக்கல்வாங்கல்கள் சரியாக இனங்காணப்பட்டு கணக்கிற்கு கொண்டு வரப்பட வேண்டும். |

**1.6.3 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

திணைக்களத்தினால் பின்வரும் சில ஆவணங்கள் பேணப்பட்டிருக்காத அதேநேரம் ஏனைய சில ஆவணங்கள் முறையாக நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட்டிருக்காதமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | உரிய பதிவேடு தற்போது நாளதுவரையாக்கப்பட்ட முறையில் பேணப்பட்டு வருகிறதென தெரிவிக்கப்படுகிறது. | அனைத்து பதிவேடுகள், புத்தகங்கள் போன்றன நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் பேணப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 1645 இன் பிரகாரம் வாகன சம்பவத்திரட்டுப் புத்தகம் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | நிதிப்பிரமாணம் 341 இன் பிரகாரம் அடியிதழ் சேர் புத்தகங்களின் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நி.பி. 128(2)(ஈ) மற்றும் 2015 யூலை 20 ஆம் திகதிய 01/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தி ஆகியவற்றின் பிரகாரம் 04 வருமானக் குறியீடுகள் தொடர்பாக 2020 ஆம் ஆண்டுக்கான காலாண்டு வருமான அறிக்கைகள் கணக்காய்வு திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டு முதல் 04 வருமானக் குறியீடு தொடர்பாக காலாண்டு வருமான அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தாமதமின்றி உரிய திகதிகளில் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நி.பி. 128(2)(ஈ), நி.பி. 176(1) மற்றும் 2015 யூலை 20 ஆம் திகதிய 1/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 08 ஆம் பந்தி என்பவற்றின் பிரகாரம் 1003-07-09- ஆம் இலக்க வருமானக் குறியீட்டின் கீழ் வருமான நிலுவைகளின் அரையாண்டு அறிக்கைகள் குறித்த காலப்பகுதி முடிவடைந்து ஒரு மாததத்திற்குள் நிதிக் கொள்கை பணிப்பாளரிற்கான பிரதியொன்றுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். 2021 ஆம் ஆண்டிற்கான அந்த அறிக்கைகள் எதுவும் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

**2.2 செலவின முகாமைத்துவம்**

-----------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | ----------------------------------------- | ------------------------------------------------- | ----------------- |
| (அ) | மீளாய்வாண்டில் 05 மிண்டெழும் செலவின விடயங்களிற்காக ரூபா 960.70 மில்லியன் மேலதிக நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் நிதியேற்பாட்டைப் பயன்படுத்திய பின்னர் சேமிப்பு ரூபா 443.52 மில்லியனாக இருந்தது. அந்த சேமிப்பு மொத்த நிதியேற்பாட்டில் 45.49 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | சிக்கனமாக செலவிட்டமை, வாகன இறக்குமதி மீதான கட்டுப்பாடுகள் காரணமாக இலக்கத் தகட்டின கொள்வனவு குறைவடைந்தமை, கொவிட்-19 காரணமாக சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதில் மட்டுப்படுத்தல்கள் போன்றவற்றால் இந்த சேமிப்புகள் ஏற்பட்டுள்ளன. | மதிப்பீடுகள் யதார்த்தமாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் 07 மூலதன செலவின விடயங்களிற்காக ரூபா 1387.70 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் நிதியேற்பாட்டைப் பயன்படுத்திய பின்னர் சேமிப்பு ரூபா 676.45 மில்லியனாக காணப்பட்டது. அந்த சேமிப்பு மொத்த நிதியேற்பாட்டில் 42.56 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரையான விச்சில் காணப்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | செலவின விடய இல. 307-2-1-12-1102, 307-2-1-12-2102, 307-2-1-12-2104 மற்றும் 307-2-1-12-2106 இற்கு மேற்கொள்ளப்பட்ட முறையே ரூபா 3,200,000, ரூபா 50,000,000, ரூபா 50,000,000 மற்றும் ரூபா 25,000,000 ஆன மொத்த நிதியேற்பாடுகள் முற்றிலும் (100%) சேமிக்கப்பட்டன. | E-Motoring செயற்திட்டத்திற்காக இந்த நிதியேற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்தை அமுல்ப்படுத்தாததால் பொதுத் திறைசேரிக்கு நிதியேற்பாடுகள் திருப்பி அனுப்பப்பட்டன. | -மேற்படி- |
| (ஈ) | மீளாய்வாண்டில் நி.பி. 66/69 இன் பிரகாரம் செலவின விடயம் ஒன்றின் (03-1409) மூலம் 06 செலவின விடயங்களுக்கு ரூபா 21.6 மில்லியன் மேலதிக நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | போக்குவரத்துச் செலவின அதிகரிப்பு, உத்தியோகத்தர்களின் சம்பள நிலுவைக் கொடுப்பனவு, பாதுகாப்புச் சேவைகளின் திருத்தக் கட்டணங்கள் என்பவற்றின் காரணமாகவே மேலதிக நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது என தெரிவிக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

## 2.3 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை ஏற்படுத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | படிவம்-(iii) இன் பிரகாரம் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் பற்றிய கூற்று தயாரிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் அப் பிழையை திருத்தம் செய்து கணக்குகள் தயாரிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களால் நிர்ணயிக்கப்பட்டவாறு அனைத்து படிவங்களும் நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொறுப்புக்களாக இனங்காணப்படாத ரூபா 52,393,343 தொகை 2022 ஆம் ஆண்டில் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது. | -மேற்படி- | மீளாய்வாண்டிற்குரிய அனைதத்து செலவினங்ககளும் சரியாக இனங்காணப்பட்டு கணக்கிற்கு கொண்டு வரப்பட வேண்டும். |
| (இ) | நிதிப்பிரமாணம் 94 (I) இன் மூலம் தேவைப்படுத்தப்பட்டவாறு சேமிப்பை விஞ்சி பொறுப்புகளை ஏற்படுத்த முடியாத போதிலும் திணைக்களம் 05 செலவின விடயங்களின் சேமிப்புக்களை விஞ்சி ரூபா 10,615,357 பொறுப்புக்களை ஏற்படுத்தியிருந்தது. | எதிர்காலத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியேற்பாடுகளின் எல்லைக்குள் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகளை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | கடப்பாடுகளும் பொறுப்புக்களும் ஒதுக்கீடு செய்யப்பட்ட எல்லைக்குள் ஏற்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | 2021 ஒக்தோபர் 26 ஆம் திகதிய SA\MAA\02\01\01 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டல்களின் இல. 02/2021 இல் உள்ள 4.5 ஆம் பந்தியில் திறைசேரிக்கு அறிக்கையிடப்படாத எந்தவொரு கடப்பாடு அல்லது பொறுப்பு 2022 ஆம் ஆண்டிற்குள் தீர்ப்பனவு செய்யப்படக்கூடாது என குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட பொறுப்பு கூற்றில் (குறிப்பு IV) குறிப்பிடப்பட்ட பெறுமதிகளிற்கும் திறைசேரியின் திரண்ட | எதிர்காலத்தில் தாமதத்துடன் பெறப்படுகின்ற பொறுப்புக்கள் பொறுப்புக்களாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | அரச கணக்கு வழிகாட்டல்கள் பின்பற்றப்பட வேண்டும். |

கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய அறிக்கையில் (SA 92) குறிப்பிடப்பட்டபெறுமதிகளிற்கும் இடையில் ரூபா 374,466,747 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

## 2.4 முற்பணங்களை வழங்குதலும் தீர்ப்பனவு செய்தலும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 536,749 கூட்டுமொத்தமான 15 கடன்பட்டோர் மீதிகள் கடன்பட்டோர் இறந்து 05 வருடங்களுக்கு மேலாகியும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | பிணைதாரரிடமிருந்து நிலுவைகளை அறவீடு செய்வதற்கு ஓய்வூதியத் திணைக்களத்திடம் தகவல் கோரப்பட்டுள்ளது. | அனைத்து கடன் மீதிகளையும் தாமதமின்றி தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நி.பி. 485(4) மற்றும் நி.பி. 113(6)(ஆ) ஆகியவற்றின் பிரகாரம் இடமாற்றம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் மூன்று மாதங்களுக்குள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும் இடமாற்றம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களின் 2021 திசெம்பர் 31 வரை தீர்ப்பனவு செய்யப்படாமல் இருந்த கடன் மீதி ரூபா 649,315 ஆக காணப்பட்டதுடன் இதில் 05 வருடங்களுக்கும் மேலாக தொடர்ந்து காணப்பட்ட மீதிகள் ரூபா 465,885 ஆக காணப்பட்டது. | அரச சேவை, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடம் விபரங்களை அறிந்து கொள்வதற்காக கோரப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (இ) | 05 வருடங்களுக்கும் மேலாக காணப்பட்ட ஓய்வூதியம் இடைநிறுத்தப்பட்ட 07 உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 302,722 கடன் மீதியும் 2-3 வருட காலப்பகுதிக்குரிய ரூபா 176,565 கடன் மீதியும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | ஓய்வூதியத் திணைக்களத்திடமிருந்து தகவல்களை அறிந்து கடன்களை அறவீடு செய்வதற்கும், 05 வருடங்களுக்கு மேலாக காணப்பட்ட ரூபா 25,000 இற்கும் குறைவான கடன் மீதிகளை பதிவழிப்பதற்கு குழுவொன்றை நியமனம் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தேவையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 21 இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தர்களிடம் இருந்து பெறப்பட வேண்டிய ரூபா 1,671,988 கடன் மீதி 2021 திசெம்பர் 31 வரையிலும் முதன்மைக் கடன்பட்டோரிடமிருந்தோ அல்லது பிணைதாரர்களிடமிருந்தோ அறவீடு செய்யப்பட முடியாதிருந்தன இதில் 05 ஆண்டுகளுக்கும் மேலாக காணப்பட்ட ரூபா 1,170,753 கூட்டுமொத்தமான 17 கடன் மீதிகள் உள்ளடங்கியிருந்தன. | பிணைதாரரிடமிருந்து மீதிகளை அறவீடு செய்வதற்கான தகவல்களை அறிந்துகொள்வதற்கு அரச சேவை, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் 05 ஆண்டகளிற்கு மேலாக காணப்பட்ட ரூபா 25,000 இற்கும் குறைவான கடன் மீதிகளை பதிவழிப்பதற்கான குழுவொன்றை நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | காலம் முடிவடைந்து விட்டதால் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | பதவி வறிதாக்கப்பட்ட 06 உத்தியோகத்தர்களிடம் இருந்து பெறப்பட வேண்டியதும் அவர்களது கடைசி தவணைப்பணத்தை அறவீடு செய்ததிலிருந்து 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்ததுமான ரூபா 185,388 கடன் மீதி மற்றும் 2-3 ஆண்டுகளிற்கு இடையேயான காலப்பகுதிக்குரிய ரூபா 48,654 கடன் மீதி என்பன அறவீடு செய்யப்பட முடியாதிருந்தன. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஊ) | ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்பட வேண்டிய கடன் மீதிகளில் 03 மாதங்கள் முதல் 02 ஆண்டுகள் வரையான காலமாக தொடர்ந்து காணப்பட்ட ரூபா 1,323,291 கூட்டுமொத்தமான கடன் மீதிகளை அறவீடு செய்ய முடியாதிருந்தது. | ஓய்வூதியம் நிறுத்தப்பட்டுள்ளது. | -மேற்படி- |

**2.5 வைப்பு மீதிகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 ஆண்டுகள் கடந்திருந்த 03 வைப்பு கணக்குகளிற்குரிய ரூபா 14,746,329 வைப்பு தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை | 0-010-0-016-0-6000 இன் கீழ் உள்ள வைப்புக்கள் ஒப்பந்தங்கள் தொடர்பானபிணை வைப்புக்களாக உள்ளதால் தகவல்களை விசாரித்த பின்னர் எதிர்காலத்தில் அது விடுவிக்கப்படும். | நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 0-053-0-002-0-0-6000 சம்பந்தப்பட்ட நிறுவனங்களால் எழுத்துமூல கோரிக்கை விடுக்கப்படாவிட்டால் அதனை வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>0-027-0-013-0-0-6000 தகவல்கள் கோரப்பட்டு,ள்ளதுடன் அத்தகைய தகவல் கிடைத்ததும், அவற்றை மேலும் வைத்திருப்பதற்கான சாத்தியக்கூறுகளை பரிசீலித்த பின்னர் இந்த வைப்புக்களை வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | 2015 யூலை 20 ஆம் திகதிய 01/2015 ஆம் இலக்க அரச நிதிக் கொள்கை சுற்றறிக்கையின் 04(இ) பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு வைப்பு கணக்கிலும் சேகரிக்கப்படும் வருமானம் தொடர்ந்துவரும் மாதத்தின் முதல் வாரத்திற்குள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும் மாகாண சபைகளுக்காக 6000-0-0-014-0-004-0 ஆம் இலக்கத்தையுடைய வைப்புக் கணக்கின் மூலம் சேகரிக்கப்பட்ட வருமானம் சம்பந்தப்பட்ட சுற்றறிக்கையின் வழிகாட்டலின் பிரகாரம் அனுப்பபட்டிருக்கவில்லை. | கொவிட் தொற்றுநோய் காரணமாக மாகாண சபையின் வருமானத்தை அனுப்புவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் மாதத்தின் முதல் வாரத்திற்குள் வருமானத்தை உரிய முறையில் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையில் உள்ள ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |
| (இ) | நி.பி. 571 இன் பிரகாரம் காலங்கடந்த அனைத்து வைப்புக்களினதும் பட்டியல்கள் ஒவ்வொரு அரையாண்டின் இறுதியிலும் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத்தகைய பட்டியல்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கொரோனா தொற்றுநோய் காரணமாக அறிக்கைகளை அனுப்புதல் தாமதமான போதிலும் 2020.11.15 மற்றும் 2020.02.17 ஆம் திகதிய கடிதங்கள் DMT/ACC/H/07 மூலம் வருடாந்த அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஈ) மூன்று வைப்புக்களின் தனிநபர் மீதிப் பட்டியல்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்ட அலுவலகங்களில் ரூபா 12,058,836 வைப்பு மீதிகள் காணப்பட்ட போதிலும் அதன் பகுப்பாய்வு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மேலும் நிறுத்திவைக்கப்படக்கூடாத வைப்பு ஏதேனும் இருந்தால் எதிர்காலத்தில் வருமானத்திற்கு செலவு வைக்கப்படும். | தேவைப்பாடுகளிற்கு ஏற்ப பகுப்பாய்வுடன் அறிக்கைகள் தயாரிக்கப்பட வேண்டும். |

## 2.6 வங்கிக் கணக்குகளை செயற்படுத்துதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 4,068,400 பெறுமதியான 95 காசோலைகள் அவர்களிற்கு வழங்கப்பட்டதிலிருந்து கொடுப்பனவுகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 6 மாத காலம் கடந்திருந்த போதிலும் நி.பி. 96(ஈ) இன் பிரகாரம் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கோ அல்லது ஏனைய பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்கோ எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதில் ஒரு வருடத்தை விஞ்சியிருந்த ரூபா 3,449,508 பெறுமதியான 30 காசோலைகள் உள்ளடங்கியிருந்தன. | வழங்கப்பட்ட போதிலும் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாத காசோலைகளில், ரூபா 3,597,311 பெறுமதியான 30 காசோலைகள் தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளதுடன் மீதமுள்ள ரூபா 471,089 பெறுமதியான காசோலைகள் நி.பி. 96(ஈ) இன் பிரகாரம் வருமானத்திற்கு செலவு வைக்கப்படும். | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) மோட்டார் போக்குவரத்து அதிகாரச்சட்டம் (அத்தியாயம் 203) | | | |
| (i) 30 (1)(ஊ)(iii) ஆம் பிரிவு மற்றும் 20/2020 ஆம் இலக்க உள்ளக சுற்றறிக்கை | இலங்கையில் முதன்முறையாக மோட்டார் வாகனம் பதிவு செய்யப்பட்ட திகதியிலிருந்து 03 நாட்களுக்குள் வருமான அனுமதிப்பத்திரத்திற்கான விண்ணப்பப் படிவம் | கணனி தரவுகளை பரீட்சித்த போது வாகனங்களுடன் தொடர்புபட்ட கவுண்டர் இலக்கங்கள் (counter numbers) முதல் பதிவு ஆண்டு தொடர்பாக | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 14 வாகனங்களில் 09 வாகனங்களுக்கான வருமான அனுமதிப்பத்திரம் 2009 ஏப்ரல் முதல் 2020 யூலை வரையிலான முதல் பதிவு திகதியிலிருந்து 06 முதல் 19 ஆண்டுகள் வரையான நீண்ட காலப்பகுதிக்காக ஒரே நேரத்தில் பெறப்பட்டிருந்தன. | பெறப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. | |
| (ii) | 32 ஆம் பிரிவு | 2018 நவம்பர் 24 முதல் 2018 நவம்பர் 25 வரை ஒரு நாளுக்கு மாத்திரமே செல்லுபடியாகும் வகையில் 14 வாகனங்களில் ஒரு வாகனத்திற்கான அனுமதிப்பத்திரம் முதலில் மேல் மாகாண வருமான அனுமதிப்பத்திரம் வழங்கும் அதிகாரசபையால் வழங்கப்பட்டது. | மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் நேரடி மேற்பார்வையின் கீழ் வருமான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுவதில்லை என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கிறோம். | -மேற்படி- |
| (iii) | 30(1)(ஊ)(iii) ஆம் உப பிரிவு | முறைமையில் காணப்பட்ட 05 பழைய வெற்றிட வாகன இலக்கங்களுக்கு பின்னர் சேர்க்கப்பட்ட புதிய வாகனங்களுக்காக பதிவு செய்யப்பட்ட 1992 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான 27 ஆண்டுகளுக்கு ஒரே நேரத்தில் வருமான அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருந்தது. | தொடர்ச்சியாக வருமான அனுமதிப்பத்திரம் பெறப்படாத வாகனங்களுக்கு வருமான அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு முன்னர் இத் திணைக்களத்திடம் விசாரிப்பதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (iv) | 30(1)(ஊ)(III) ஆம் உப பிரிவு | மேலே குறிப்பிட்டுள்ளவாறு 05 செல்லாத வாகன இலக்கங்களில், ஒரு வாகனத்திற்கான வருமான அனுமதிப்பத்திரம் 2015 திசெம்பர் 30 இல் முதலபவது பதிவு திகதியிலிருந்து 11 மாதங்களுக்குப் பின்னர் பெறப்பட்டது. | மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் நேரடி மேற்பார்வையின் கீழ் வருமான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுவதில்லை என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கிறோம். | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2015 யூலை 20 ஆம் திகதிய 01/2015 ஆம் இலக்க அரச நிதிக் கொள்கை சுற்றறிக்கையின் 04(ஆ) பந்தி | 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரை ரூபா 82,669,000 இலிருந்து ரூபா 214,323,900 வரையான ஆடம்பர வகையில் ரூபா 131,654,900 தொகையான வரி வருமான நிலுவை அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டதுடன் அத்தகைய நிலுவைகளை அறவீடு செய்வதற்கு அல்லது நிலுவைகள் மேலும் திரள்வதை தடுப்பதற்கு உடனடி நடவடிக்கைகளை எடுப்பதற்கு எந்தவொரு அளவீடும் பின்பற்றப்பட்டிருக்கவில்லை . | வரி செலுத்தத் தவறிய அனைத்து இனங்காணப்படாத வாகன உரிமையாளர்களுக்கும் நினைவூட்டல்கள் அனுப்பப்பட்டுள்ளன. காப்புறுதி முகவர் நிலையங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் பெருமளவிலான வரி நிலுவை தொகைகளை அறவீடுசெய்யும் சாத்தியத்தன்மை காணப்படுகின்றது என தெரிவிக்கப்பட்டுள்ளது. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 பெறுகைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 7.9.10 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகோல்கள் மற்றும் முறைமைகளின் பிரகாரம் கேள்விகள் முதலில் கண்டிப்பாக மதிப்பீடு செய்யப்பட வேண்டியதுடன் அத்தகைய மதிப்பிடப்பட்ட கேள்விகள் மிகக் குறைந்த மதிப்பீடு செய்யப்பட்ட கணிசமாக பதிலளிக்கக்கூடிய கேள்வியை தீர்மானிப்பதற்காக ஒப்பிடப்பட வேண்டும். எனினும் வாகனப் பதிவு சான்றிதழிற்காக அஞ்சல் சாளரத்துடன் கூடிய 300,000 உறைகளை அச்சிடுவதற்கான பெறுகையின் போது கேள்வி சமர்ப்பித்திருந்த நிறுவனங்களின் கேள்விகள் திணைக்கள | 2022 ஆம் ஆண்டின் பெறுகை நடவடிக்கைகளின் போது இது தொடர்பில் கவனம் செலுத்தப்படும் எனவும் இது தொடர்பில் அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விபரக்குறிப்புக்களுடன் இணங்குகின்றதா என்பதைப் பிரதிபலிக்கும் கேள்வி மதிப்பீட்டு அறிக்கையானது (பெறுகைக் கையேடு 7.11.1) தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவால் தயாரிக்கப்பட்டதற்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.9.1(ஆ) வழிகாட்டலின் பிரகாரம் ரூபா 500,000 இற்கு மேற்பட்ட பொருட்கள் மற்றும் சேவை ஒப்பந்தங்கள் தொடர்பாக முறையான ஒப்பந்த உடன்படிக்கை எழுதப்பட்டு கைச்சாத்திடப்பட வேண்டிய போதிலும் ரூபா 1,875,000 இற்கு மேற்பட்ட மேற்படி பெறுகை தொடர்பாக இரு தரப்பினருக்கும் இடையே முறையான உடன்படிக்கை எதுவும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | பொருட்களின் கொள்வனவு போன்ற பெறுகைக்கான ஒப்பந்த உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. எதிர்காலத்தில் இந்த பிழையை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான பிணை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நி.பி. 880 இல் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பொதுப் பணம், வருமானத்திற்கு நிர்வாக ரீதியாக பொறுப்பாக உள்ள உத்தியோகத்தர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச்சட்டம் (Cap. 612) மற்றும் 1999 ஏப்ரல் 09 ஆம் திகதிய 1/99 ஆம் இலக்க பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம் பிணை வழங்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தகைய பிணைகளை வழங்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் அறவிடப்பட வேண்டிய பிணைத் தொகை தொடர்பாக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ள போதிலும் மேற்படி சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் வெரஹெர உப அலுவலகத்தின் காசு | வெரஹெர அலுவலகத்தில் பணம் சேகரித்தல் தொடர்பான கடமைகளில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளின் பிணையை வைப்பிலிடுவதற்கு ஏற்பாடு செய்யப்படும். | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

கருமபீடம் 04 இலும் பிரதான காசாளர் பிரிவிலும் உள்ள ஐந்து பணம் பெறும் உத்தியோகத்தர்கள் பிணைகளை வைப்புச் செய்திருக்கவில்லை.

### 3.3 நட்டங்களும் சேதங்களும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019, 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் திணைக்களத்திற்குச் சொந்தமான 8 வாகனங்களுக்காக 9 சந்தர்ப்பங்களில் ரூபா 1,177,965 கூட்டுமொத்தமான நட்டங்கள் ஏற்பட்டுள்ள போதிலும் நிதிப்பிரமாணம் 104(3)(4) மற்றும் 109(1)(ஆ) இன் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டிய பொது 283, பொது 284 மற்றும் பொது 285 அறிக்கைகளின் பிரதிகள் நாளது வரை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நி.பி. 104 இன் பிரகாரம் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டிற்குரிய பூர்வாங்க விசாரணைகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை என்றும் நி.பி. 104(3)(4) மற்றும் 109 இன் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டிய பொது 283, 204 மற்றும் 285 அறிக்கைகள் கணக்காய்விற்கு காலக்கிரமத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் அறிக்கைகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2002 நவம்பர் 13 முதல் 2018 நவம்பர் 24 வரையிலான 30 ஆண்டுகளுக்கு மூன்று வாகனங்கள் தொடர்பான வருமான அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் தண்டப்பணம் என ரூபா 213,070 கூட்டுமொத்த தொகையான நட்டம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | காலக்கிரமத்தில் பதில்கள் வழங்கப்படும். | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட வாகனங்கள் தொடர்பான தகவல்களை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்ட தகவல் பரிமாற்ற முறையுடன் தொடர்புடைய | மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் தகவல்களை RAMIS முறைமைக்கு வழங்குவது தொடர்பான நடவடிக்கைகள் 2018 முதல் இன்று வரை | செலவிடப்பட்ட தொகைக்கு பொருத்தமான நன்மை கிடைக்கும் வகையில் பொது நிதி பயன்படுத்தப்பட வேண்டும். |

| | |
|---|---|
| முறைமை அபிவிருத்தி செயற்திட்டம் 2018 ஆம் ஆண்டுக்குப் பின்னர் செயலிழந்திருந்தமையும் இத் திணைக்களத்தால் இன்போமற்றிக்ஸ் இன்டர்நேஷனல் (லிமிட்டட்) இற்கு 2018 திசெம்பர் 19 வரை செலுத்தப்பட்ட ரூபா 2,420,000 தொகை ஒரு சிக்கனமற்ற செலவினமாக காணப்பட்டமையும் அவதானிக்கப்பட்டது. இச் செயற்திட்டத்தின் நன்மைகள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு மாத்திரமே கிடைத்துள்ளது என்பதும் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் எவ்வித நன்மையும் பெறப்பட்டிருக்கவில்லை என்பதும் மேலும் அவதானிக்கப்பட்டது. | முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை என்ற தமது அவதானிப்புடன் நான் இணங்குகின்றேன். |

**3.5 நிதி மோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பழைய வாகனங்களின் தரவுகளை முறைமையில் மாற்றியதால், 11 சொகுசு ஜீப்கள் உட்பட 14 வாகனங்கள் மீது செலுத்த வேண்டிய கலால் வரி, சொகுசு வரி மற்றும் ஏனைய அரசாங்க கட்டணங்கள் போன்றவற்றில் ரூபா 499,569,300 வருமானத்தை அரசாங்கம் இழந்துள்ளது. அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறுள்ளன. | | |
| (i) மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தின் (Cap. 203) 08 அம் பிரிவின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்தாமல் எந்த மோட்டார் வாகனமும் பதிவு செய்யப்படக்கூடாத போதிலும் சமீபத்தில் கணனி முறைமையில் புதிய பதிவு தரவை தவறாகப் பதிவுசெய்த பின்னர் பதிவு செய்யப்பட்ட 14 வாகனங்களுக்குப் பதிவுக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. வாகனம் ஒன்றிற்கு ரூபா 23,950 பதிவுக் கட்டணப் படி அரசாங்கத்திற்கு ஏற்பட்ட மொத்த வருமான இழப்பு ரூபா | அறவிடப்படாமல் மேலும் தரவை உள்ளிடுவது சிக்கலாக உள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது. | முறையான விசாரணை நடாத்தி சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 335,300 ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (ii) | கணனி முறைமையில் தவறான தரவு உள்ளிடப்பட்டதன் காரணமாக, பதிவு செய்யப்பட்ட வாகனங்களின் 07 அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகளுக்கான சொகுசு வரி கொடுப்பனவு திகதியை கண்டறிய முடியவில்லை. புதிய தரவை உள்ளிடும் போது குறிப்பிட்ட திகதிகளை முறைமையால் இனங்காண முடியாததால், அது 1900 சனவரி 01 என பதிவு செய்யப்பட்டு, இந்த வாகனங்கள் தயாரிக்கப்பட்ட ஆண்டு 1996 முதல் 2002 வரை பழமையானதுதாக காணப்பட்டது. 2017 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை தொடர்புடைய தரவுகளின் கணினிமயமாக்கல் மூலம் தவறுதலாக பதிவு செய்யப்பட்ட இந்த டீசல் ஜீப்களின் எஞ்சின் இயலளவு 2200cc ஐ விஞ்சியிருந்தது. மேலும், ரூபா 2,595,000 தொகையான சொகுசு வரி நிலுவைகள் மற்றும் 50 சதவீத தண்டப்பணம் மற்றும் 2012 இன் 12 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11 வது பிரிவின் மூலம் திருத்தப்பட்ட 1995 இன் 16 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் முதலாவது பட்டியலின் பிரகாரம் எதிர்காலத்தில் 07 ஆண்டுகள் வரை பெறவேண்டிய ரூபா 1,155,000 சொகுசு வரி என்பன உட்பட ரூபா 3,750,000 மொத்த வரி வருமானத்தை அரசாங்கம் இழந்துள்ளமை அவதானிக்கப்பட்டது. | இந்த 14 வாகனங்களில் 06 வாகனங்களுக்கு வரி செலுத்தப்பட்டுள்ளதெனவும் எஞ்சிய வாகனங்களுக்கு வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதெனவும் தெரிக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (iii) | சுங்க வரி செலுத்தாமல் சட்டவிரோதமாக இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட அல்லது சட்டவிரோதமாக இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டு, வாகன தரவுகளை திணைக்களத்தின் கணனி முறைமையில் | சுங்க வரி மற்றும் கலால் வரி ஆகியவை சுங்கத் திணைக்களத்தால் அறவிடப்பட்டு, தொடர்புடைய அனுமதி வரியைச் செலுத்திய பின்னர் தரவுகளை இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். தரவு | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | பிழையாக உள்ளிட்டு சட்டப்பூர்வ வாகனங்களாக இலங்கையில் பயன்படுத்த விடுவிக்கப்பட்ட 14 வாகனங்களுக்கு அரசாங்கம் ஏறத்தாழ ரூபா 495,484,000 கலால் வரியை இழந்துள்ளமை அவதானிக்கப்பட்டது. | இணைக்கப்பட்ட வாகனங்கள் மாத்திரமே பதிவு செய்யப்படும். | |
| (ஆ) | வாகனப் பதிவு இலக்கங்களை தொடர்ச்சியாக வரிசையாக வழங்குவதற்குப் பதிலாக, சில இலக்கங்களை வெற்றிடமாக விட்டு வாகனங்கள் பதிவு செய்யப்பட்டன, பின்னர் அந்த வெற்றிட எண்களின் கீழ் கணனி முறைமையில் தரவுகளை தவறாக உள்ளிட்டு 05 புதிய வாகனங்கள் பதிவு செய்யப்பட்டன. சொகுசு வரி, கலால் வரி மற்றும் ஏனைய அரசாங்க கட்டணங்கள் என அரசாங்கம் ஏறத்தாழ ரூபா 4,643,800 தொகையை இழந்துள்ளமை அவதானிக்கப்பட்டது. | | |
| (i) | மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தின் (Cap. 203) 8 ஆம் பிரிவின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்தாமல் எந்த மோட்டார் வாகனமும் பதிவு செய்யக்கூடாத போதிலும் புதிய பதிவுக்காக எந்தக் கட்டணமும் அறவிடப்படாமல் 05 பழைய வெற்றிட வாகன இலக்கங்களுக்கு பின்னர் புதிய பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. அரசாங்கம் ஏறத்தாழ ரூபா 99,200 வருமானத்தை இழந்திருந்தது. | மக்கள் வங்கியின் பற்றுச்சீட்டின் ஊடாக 04 வாகனங்களுக்கு பணம் அறவிடப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (ii) | இந்த 05 வாகனங்களில், 2018/2019 ஆம் ஆண்டு முதல் 2020/2021 ஆம் ஆண்டு வரை ஒரு வாகனத்திற்காக இழந்த மொத்த வரி பெறுமதி ரூபா 110,000 சொகுசு வரி மற்றும் ரூபா 55,000 தண்டப்பணம் உட்பட ரூபா 165,000 ஆக காணப்பட்டது. மேலும், எதிர்காலத்தில் பெறப்பட வேண்டிய ரூபா 130,000 வரி உட்பட ரூபா 295,000 மொத்த வருமானத்தை அரசாங்கம் | இந்த வாகனம் வரி விதிக்கக்கூடிய வாகனமாக இனங்காணப்பட்டு, உரிய வரித் தொகையை செலுத்துமாறு தற்போதைய உரிமையாளருக்கு கடிதம் அனுப்பி அறிவிக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | இழந்துள்ளமை அவதானிக்கப்பட்டது. | | |
| (iii) | சுங்க வரி எதுவும் செலுத்தாமல் முறைமையில் தரவுகளை தவறாக உள்ளிடுவதன் மூலம் பதிவு செய்யப்பட்டதால் ரூபா 4,249,600 கலால் வரி வருமானம் சுங்க அனுமதியின் போது அரசாங்கத்தால் இழக்கப்பட்டுள்ளது. | சுங்க வரி மற்றும் கலால் வரி ஆகியவை சுங்கத் திணைக்களத்தால் அறவிடப்பட்டு, தொடர்புடைய அனுமதி வரியைச் செலுத்திய பின்னர் தரவுகளை இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். தரவு இணைக்கப்பட்ட வாகனங்கள் மாத்திரமே பதிவு செய்யப்படும். | -மேற்படி- |
| (இ) | விசேட நோக்கங்களுக்காக இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்கள் இரட்டை நோக்கத்திற்கான பதிவு இலக்கங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டதன் காரணமாக 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் 09 வாகனங்களுக்கு மாத்திரம் அரசாங்கம் ரூபா 27,472,988 சுங்க வரித் தொகையை இழந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. ஆகையால் தவறான பதிவுகளைத் தடுப்பதற்கு உள்ளக கட்டுப்பாட்டு முறைமை அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இலங்கை சுங்கம் வரியை அறவிட்டு கொடுப்பனவு விபரங்களை எமது திணைக்களத்தின் கணனி வலையமைப்புடன் இணைத்த பின்னரே வாகனப் பதிவு மேற்கொள்ளப்படுகிறது. இந்த 09 வாகனங்களில், ஒரு வாகனம் மாத்திரமே PZA வகையைச் சேர்ந்தது, அதன் பிரகாரம் அந்த வாகனத்தின் கோவையை கொண்டு வந்து முறைகேடுகள் இடம்பெற்றுதுள்ளதா எனத் தெரிவிப்பதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. உள்ளக சுற்றறிக்கையொன்றை வெளியிடுவதன் மூலம், எதிர்காலத்தில் இதுபோன்ற முறைகேடுகள் நடக்காமல் தடுப்பதற்கு அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | முறையான விசாரணை நடத்தி அரசுக்கு இழந்த வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.6 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 கணக்காண்டுக்காக திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட 01 கணக்காய்வு ஐயவினாவிற்கான பதில் 2022 மே 20 வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | ஒரு கணக்காய்வு ஐயவினாவைத் தவிர அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களிற்கும் தற்போது பதில்கள் வழங்கப்பட்டுள்ளன. | கணக்காய்வு ஐயவினாக்களிற்கு தாமதமின்றி பதிலளிக்கப்பட வேண்டும். |

**3.7 முகாமைத்துவ பலவீனங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாகாண மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வருமான அனுமதிப் பத்திரங்கள் தொடர்பான கணனித் தரவுகளை இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மையின் (ICTA) ஒருங்கிணைப்பின் கீழ் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு eRL 2.0 செயற்திட்டத்தை 2021 செப்தெம்பர் மாதத்தில் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் சம்பந்தப்பட்ட செயற்திட்டம் தாமதமானதால், வாகன மாற்றங்களுக்காக சமர்ப்பிக்கப்பட்ட வருமான அனுமதிப்பத்திரங்களின் சரியான தன்மை தொடர்பான திணைக்களத்தின் உறுதிப்படுத்தல் பணி மேலும் தாமதமாகியிருந்தது. மேலும், வாகனங்களை மாற்றுதல் மீது முழுமையான உள்ளகக் கட்டுப்பாட்டைப் பேணுதல் தொடர்பான பலவீனமாக இது அவதானிக்கப்பட்டது. | மாகாண மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திடமிருந்து வருமான அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்காக தற்போது செயற்பாட்டில் உள்ள eRL 1.0 இற்குப் பதிலாக, eRL 2.0 உருவாக்கப்படுகிறது. அந்த செயற்திட்டம் இந்த ஆண்டு ஆகஸ்ட்/செப்தெம்பரில் தொடங்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது, இதன் மூலம் வாகனப் பரிமாற்றத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட வருமான அனுமதிப்பத்திரங்களின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு அனுமதிப்பத்திரங்களின் விபரங்கள் இந்தத் திணைக்களத்தால் பெறப்படும். | எதிர்பார்த்த நலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு செயற்திட்டத்தை உடனடியாக அமுல்ப்படுத்த வேண்டும். |
| (ஆ) | வாகன மாற்றம் தொடர்பான புதிய இலக்கத் தகடுகளை வழங்கும் போது பொறுப்பேற்கப்படுகின்ற அதிக எண்ணிக்கையிலான பழைய இலக்கத் தகடுகள் வாடிக்கையாளர்கள் அதிகமாகக் காணப்படும் கம்பஹா அலுவலக வளாகத்தில் பாதுகாப்பற்ற முறையில் குவிக்கப்பட்டிருந்தன. | அகற்றப்பட்ட பழைய இலக்கத் தகடுகளை கைத்தொழில் அபிவிருத்தி சபை விரைவில் கொள்வனவு செய்யும் என தெரிவிக்கப்பட்டது. | பழுதான பொருட்களை முறையாக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | கணனி மயமாக்கப்படாமல், கம்பஹா மாவட்ட அலுவலகத்தில் வெளித் தரப்பினர் அணுகக்கூடிய இடத்தில் இயங்காத பூட்டுகளுடன் கூடிய அலமாரியில் பாதுகாப்பற்ற முறையில் மோட்டார் சைக்கிள்களின் புதிய பதிவு தொடர்பான அதிக எண்ணிக்கையிலான கோவைகள் களஞ்சியப்படுத்தி | ஏற்றுக்கொள்ளப்பட்டது. மோட்டார் சைக்கிள்களின் புதிய பதிவு தொடர்பான கோவைகளை பாதுகாக்கும் வகையில், அந்த அலமாரிகளுக்கு பூட்டுகளை சரி செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. | ஆவணங்கள் முறையாகவும் பாதுகாப்பாகவும் களஞ்சியப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வைக்கப்பட்டிருந்ததுடன் அக் கோவைகள் எலிகள் மற்றும் பூச்சிகளால் ஏற்படும் சேதங்கள் காரணமாக சிதைவடைந்திருந்தன. | | |
| (ஈ) | ஜேர்மன் அரசாங்கத்திடமிருந்து நன்கொடையாக 2004 இல் வெரஹெரா வாகன பரீட்சிப்பு மையத்தால் பெறப்பட்ட ஆறு பரீட்சிப்பு கருவிகள் 2022 மே 30 வரையிலும் விளைவற்றிருந்தன. | அவற்றில் 02 கருவிகள் மாத்திரமே தயார் செய்யப்பட்டு அவற்றுடன் இயந்திர ரீதியாக மேற்கொள்ளக்கூடிய ஒரு சில செயற்பாடுகளை மாத்திரமே அவற்றால் செய்ய முடியும் என்ற முறையில் பயன்படுத்தப்படுகின்றது. உயர்தர தொழில்நுட்ப அறிக்கையை வழங்க தேவையான கருவிகளை கொள்வனவு செய்வதற்கு போதியளவு நிதியேற்பாடு கிடைக்காததால், இந்த கருவிகளின் தற்போதைய நிலையை முன்வைத்து பரிந்துரைகளை வழங்குவதற்கு சிரேஷ்ட மோட்டார் வாகன பரிசோதகர் தலைமையில் குழு ஒன்று நியமனம் செய்யப்பட்டுள்ளது. | திணைக்களத்திற்கு சொந்தமான வளங்களை சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | வெரஹெர உப அலுவலக வளாகத்தில் நிறுவப்பட்ட 18 கொள்கலன்களில் உள்ள வாகனப் பதிவு தொடர்பான அசல் கோவைகள் மற்றும் பரிமாற்றக் கோவைகள் சரியான முறையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கவில்லை, மேலும் கொள்கலன்கள் சிலவற்றில் மழைநீர் கசிந்ததால் கோவைகள் இனங்காண முடியாத அளவிற்கு அழிவடைந்துள்ளன. | 08 கொள்கலன்கள் பழுதடைந்து கோவைகள் அழிவடைந்துள்ளதால், சேதமடைந்த கோவைகளை பரீட்சித்து அது தொடர்பான அறிக்கையொன்றை பெற்று, பழுதடைந்த கோவைகளை இனங்கண்டு பயன்படுத்தக்கூடிய ஆவணங்களை பாதுகாப்பாக களஞ்சியப்படுத்துவதற்கு பிரதம உள்ளக கணக்காய்வாளர் தலைமையில் குழுவொன்றை நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அசல் மற்றும் பரிமாற்ற பதிவு கோவைகளை முறையாகவும் பாதுகாப்பாகவும் களஞ்சியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4. மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 150 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது பதவியணியைமீளாய்வாண்டின் | வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஒருங்கிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு | வெற்றிடமாக உள்ள அத்தியாவசிய பதவிகளை சட்டங்கள், |

| | | | |
|---|---|---|---|
| | இறுதி அளவில் முறையான மதிப்பாய்வு மூலம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறிவிக்கப்பட்டுள்ளது. | விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கிணங்க நிரப்ப வேண்டும். |
| (ஆ) | அம்பாந்தோட்டை மாவட்ட அலுவலகத்தின் உதவி ஆணையாளர் ஒருவர் பிழையான முறையில் மாற்றியமைக்கப்பட்ட கடவுச்சொற்களைப் பயன்படுத்தி 52 எழுத்து பரீட்சைகள் மற்றும் 09 நடைமுறைப் பரீட்சைகளில் சித்தியடைந்த பின்னர் சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்கியிருந்தார். அந்த உத்தியோகத்தர் தவறான கடவுச்சொற்களைப் பயன்படுத்தி சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்கியது தொடர்பாக நடாத்தப்பட்ட பூர்வாங்க விசாரணையின் முன்னேற்றம் நாளதுவரை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்கியமை தொடர்பான பூர்வாங்க விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளன, அதன் முன்னேற்றம் விசாரணைகளை விரைவாக பூர்த்தி செய்த பின்னர் கணக்காய்விற்கு அறிக்கையிடப்படும். | முறையான விசாரணையை நடாத்தி ஒழுக்காற்று நடவடிக்கையை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும் முறையான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையை பேணுவதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |